மு.தியாகராஜன்
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம் 636 011
மின்னஞ்சல்:thiyagu55phd@gmail.com

# திருத்தொண்டர் புராணத்தில் விருந்தோம்பல் பண்பாடு

## முன்னுரை

எல்லாம் வல்ல இறைவனால் 'உலகெல்லாம்' என்று அடியெடுத்து கொடுக்கப் பாடப்பட்டது தான் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணமாகும். இப்புராணம் தோன்றுவதற்கு மூலமாக விளங்குவது சுத்தரர் பாடியத் திருத்தொண்டர் தொகையும், நம்பியாண்டார் நம்பி பாடியத் திருத்தொண்டர் திருவந்தாதியுமே ஆகும். இத்தகு சிறப்பு வாய்ந்தப் பெரியபுராணத்தில் எல்லா செல்வமும் இருந்துக் கொள்கையில் உறுதியாக இருத்தல் என்பது அனைவருக்கும் உரிய செயல். ஆனால், எதுவும் இல்லாத காலத்திலும் கொள்கையில் உறுதியாக இருந்து தன்னுடைய பக்தி திறத்தினை வெளிப்படுத்தியவர்கள் நாயன்மார்கள். அத்தகு சிறப்புடைய நாயன்மார்களின் விருந்தோம்பல் பண்பினை எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## பண்பாடு பற்றிய விளக்கம்

பண்பாடு என்ற சொல்லுக்கு "குறிப்பிட்ட நாடு, இடம் போன்றவற்றைச் சேர்ந்த மக்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், மதம், மொழி, கலைகள், சிந்தனை வெளிப்பாடு, வாழ்கையுடன் தொடர்பு கொண்டிருக்கும் மொத்தமேயாகும்."(ப-887) என்று க்ரியாவின் தற்காலத்தமிழ் அகராதி விளக்கமளிக்கிறது. மேலும், நர்மதாவின் தமிழ் அகராதி பண்பாடு பற்றி கூறும் போது "குறிப்பிட்ட இடத்து மக்களின் பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளும், கலைகளும், சிந்தனையை வெளிப்படுத்தும் முறைகளும் மக்களின் சிந்தனை வெளிப்பாடு ஆகும்" (ப-570) என கூறுகிறது.

## இலக்கியங்களில் உணவு பற்றிய கருத்துக்கள்

தொன்மை வாய்ந்தத் தமிழினம் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தமது வாழ்கை அனுபவத்தினைத் தெளிவாக உணர்ந்திருந்தார்கள். தமிழ்ப் பொருளிலக்கணம் கூறும் முதல், கரு, உரி என்னும் மூவகைப் பொருள்களின் கருப்பொருளை வகைப்படுத்துணர்த்தக் கருதிய ஆசிரியர் "தெய்வம், உணா, மா, மரம், புள், பறை, செய்தி என்ற நூற்பாவின் மூலமாக உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத உணவிற்கு முதன்மை வாய்ந்தது நம் தமிழ்குடி என்றே குறிப்பிடுகிறார்.



Food in Literature: Papers Presented in National Seminar on Food in Literature, 2019 <pp. 392-396>

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரோ என்னும் புறநானூற்றில் இடம் பெறும் வரிகளில் பசி என்று வரும் ஒருவனுக்கு உணவு கொடுத்தால் அந்த உணவு அவனுக்கு உயிர் கொடுத்தலுக்கு சமமாக கருதப்படுகிறது. மேலும், சங்கம் மருவிய இலக்கியங்களில் ஒன்றான திருக்குறளில், திருவள்ளுவர் ஈகை என்னும் அதிகாரத்தில்,

ஆற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி (குறள்- 266)

பசியால் இருக்கும் உயிர்களுக்கு பசியைத் தீர்த்தல் வேண்டும். அதுவே அவனதுப் பொருளை பாதுக்காக்கும் பெட்டகமாகும். 'பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்' என்றப் பழமொழியைப் போல எல்லா நற்குணங்களையும் பசி அழித்தவிடும். அப்பசியைத் தீர்த்தலாகிய அறமே அவனது செல்வப் பெருமையை அழியவிடாமல் பாதுகாக்கும் என்றும்,

ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின் (குறள்-255)

பசியின் கொடுமையைத் தாங்கிக் கொள்ள பேராற்றல் வேண்டும். இந்த ஆற்றலை விடக் கொடிய பசியைத் தீர்ப்பானது ஆற்றல் மிகவும் பெரியதாகும். பசியை ஒரு பாவி என்று மணிமேகலை விவரிக்கிறது. பசி ஒரு நோய் அது மேலான குடிப்பிறப்பினை அழித்துவிடும். படித்த படிப்பைக் கைவிட வைக்கும். வெட்கத்தினை நீக்கி விடும். அழகை அலங்கோலம் செய்யும் இத்தகைய கொடிய பசி என்கிற பிணியைத் தீர்ப்பவர்களுடைய பெருமையை நாவினாலும் சொல்லி இயலாது. மேலும், திருவாகத்தில்

"பாதகமே சோறு பற்றினவா தோள்நோக்கம்" (திருவா-321) என்று மாணிக்கவாசகர் கூறுகிறார். மேலும், பக்தி இலக்கிய காலத்தில் பசியால் வருபவர்கள் அனைவரையும் மகேசுவரனாகப் பாவித்து அவரின் கால்களை நீரால் கழுவி, பூசையிட்டு, உண்ணவும், அமரவும் இடந்தந்து, உண்ணச் செல்லும் முன் கற்புரமும் காட்டி உண்ணச் செய்யும் முறையே மகேசுவர பூசையாகும். இச்செயலினை விளக்கும் விதமாக பெரியபுராணத்தில்,

புகழ்ந்த கோமயத்து நீரால்
பூமியைப் பொலிய நீவித்
திகழ்த்துவான் சதையும் போக்கிச்
சிறப்புடையத் தீபம் ஏற்றி (பெரி-பா-826)

தூய்மையான பசுவின் கோமயத்தால் நீரினை ஊற்றி, நிலத்தில் நன்குத் தெளித்து, பின்னர் ஈரம் போக நன்கு துடைத்துக் கோலமிட்டு விளக்கினை ஏற்றி, பசுமையான வாழையின் குருத்தை விரித்து அதை நீரினாலே நனைத்து மகிழ்வோடு பரிமாறினர் என்பதனையும்,

மண்ணில் பிறந்தார் வெறும் பயன்மதி சூடும்
அண்ணிலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர்நல் விழாப் பொலிவுகண்டு ஆர்தல்
உண்மை ஆம்எனில் உலகர் முன்வருக என உரைப்பார் ( பெரி- பா- 2990)

இம்மண்ணுலகில் வினைக்கீடாக வந்து பிறக்கும் உயிர்கள் எல்லாம் பிறவிப்பயனை அடைய வேண்டும். அதனை அடைவதற்கு உரிய வழியாக பிறைசூடும் பெருமானை வணங்க வரும்

அடியார்களுக்கு திருவமுது செய்வித்தலும், தம் கண்ணில் அவ்விறைவனது திருவிழாக் காலங்களில் பெரும் முகப்பொலிவினைக் கண்டு மகிழ்தலுமே சிறந்தது.

**இளையான்குடி மாறநாயனார்**

நாயனாரும் அவர் மனைவியாரும் தனக்கென ஏதும் இல்லாத நிலையிலும் இறைவன், அடியார் போல வேடம் பூண்டு நள்ளிரவில் வந்த போது கழனியில் விதைத்த நெல்லைக் கொண்டு குப்பைக்கீரைக்கறியோடு விருந்தோம்பியப் பண்பினை மேற்கொண்டனர் என்பதை பெரியபுராணம் காட்டுகிறது. இப்பண்பினை விளக்கும் விதமாக,

அழுந்திய இடருள் நீங்கி
அடியனேன் உய்ய என்பால்
எழுந்தருள் பெரியோய் ஈண்டு
அமுது செய்தருள்க (பெரி-பா-463)

என்ற பாடல் அமைகிறது. அடியவராக வந்த இறைவனுக்கு அமுதளிக்க முடியாததை எண்ணி வருந்திய இளையான்குடிமாறநாயனார் தன் மீது சினமோ, வருத்தமோ கொள்ளாது. எளியவனின் பசி தீர வேண்டும் என்று இறைவனிடம் வேண்டுவதை சேக்கிழார் பதிவுச்செய்கிறார்.

**அமர்நீதி நாயனார்**

திருநல்லூரில் சிவனடியார்க்கு திருவமுது செய்தற்பொருட்டுத் திருமடங்கட்டித் திருவிழாக்காலத்தில் தம்முடையச் சுற்றத்தாரோடு அங்குத் தங்கியிருந்த அடியார்களுக்குத் திருவமுது அளித்து வந்த நாயன்மார் இவர்.

சிந்தனை செய்வது சிவன்கழல் அல்லது ஒன்றுஇல்லார்
அந்தி வண்ணார்தம் அடியவர்க்கு அமுது செய்வித்துக் (பெரி- பா -504)

இவர் சிவபெருமானின் திருப்பாததைத் தவிர வேறு ஏதும் சிந்தைக் கொள்ளமாட்டார். அந்தி செவ்வண்ணார் திருமேனியை வணங்குபவர்களுக்கு திருவமுது தருதலும், ஆடையைக் கொடுத்தலும் தன்னுடையத் தொண்டாக கருதினார் என்று சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகிறார்.

**அப்பூதி அடிகள்**

சோழ நாட்டில் திங்க;ரில் அந்தணர் குலத்தில் தோன்றியவர். திருநாவுக்கரசரைக் காணுதற்கு முன்னமே அவருடையத் திருவடிகளை அரணாகப் பற்றி அவரைக்காண வேண்டும் என்ற ஆர்வத்தில் வாழ்ந்தவர்.

கடிது வந்தமுது செய்யக்
காலம் தாழ்க்கின்றது என்றே (பெரி- பா- 1817)

நாவுக்கரசர் முன் சென்று வீழ்ந்து, வணங்கி பணிவன்புடன் திருவமுது சாப்பிட்டு எம்குடி முழுவதையும் காக்க வேண்டும் என்று அப்பூதியடிகள் வேண்டுகிறார்.

மாதவ மறையோர் செல்வ
மனையிடை அமுது செய்து (பெரி -பா- 1829)

மாதவம் செய்த மறையோராகிய அப்பூதியடிகளின் செல்வம் பொருந்திய வளமனையில் திருவமுது உண்டு பேரன்பு கொண்டு நட்பின் திறத்தால் பல நாள்கள் தங்கியிருந்தார் திருநாவுக்கரசர் என்று சேக்கிழார் அப்பூதியடிகளின் மூலமாக குறிப்பிடுகிறார்.

**மூர்க்க நாயனார்**

'கற்ற சூதன்' என அழைக்கப்படுபவர். 'ஆதி முதல்வர் திருநீற்றின் அடையவே பொருள்' என்றறிந்து சிவனடியார் ஒருவருக்கு, அறுசுவையுடன் கூடிய அமுதினை உண்பிக்கவைத்தப் பிறகுத்தான் தான் உண்ணுதல் வேண்டும் என்பதனையே நோக்கமாக கொண்டு வாழ்ந்துவந்தார்.

தூய அடிசில் நெய் கன்னல்
சுவை இன்கறிகள் அவை அமைத்து (பெரி- பா- 3626)

தூய்மையான அன்னம், நெய், இனிய சுவையுடைய கறிகள் போன்றவைச் சமைத்து வரும் அடியார்களை, வரவேற்று முகமலர்ச்சியுடன் விருப்பத்தோடு அமுதினை உண்ணச் செய்து, பின் அவர்கள் விரும்பியப் பொருளை விரும்பியவாறே அளித்து அதனால் மகிழ்ச்சியடைந்து நாள்தோறும் இதனை தவறாமல் செய்ய வேண்டும் என்று குறிப்பிடுகிறார்.

**சிறுத்தொண்டர்**

காவிரித் திருநாட்டில் திருச்செங்காட்டாங்குடியில் மாமாத்திரர் குலத்தில் தோன்றியவர் பரஞ்சோதியார். இவர் ஆயுள் வேதக்கலையிலும், வடநூற்கலையிலும், படைக்கலத்தொழிலும் நிரம்பிய பயிற்சியுடையவர். தம் மனையறத்தினை நிகழ்த்தி நாள்தோறும் சிவனடியார்களைத் திருவமுது செய்வித்துப் பின்பு தான் உண்ணுதலை வழக்கத்தினை மேற்கொண்டார்.

நறை இதழித் திருமுடியார்

அடியாரை நாள் தோறும்

முறைமையினில் திருவமுது

முன் ஊட்டிப் பின் உண்ணும் (பெரி- பா -3677)

சிவன் கொன்றை மலர் மாலையினை அணிந்தவன். அவனது புகழினை வாயார நாள்தோறும் பாடி, அடியவருக்கு திருவமுது ஊட்டி, அதனை முறையாகச் செய்து இருப்பதனை பெரும் பயனாகக் கருதி சிறுத்தொண்டர் வாழ்ந்து வந்தார். மேலும்

தூய திரு அமுதுகனி

கன்னல் அறுசுவைக் கறிநெய்

பாய தயிர் பால் இனிய

பண்ணியம் உண்நீர் அமுதம் (பொ- பா-3678)

தூய்மையான திருவமுது, கனிவகை, சர்க்கரை, அறுசுவைகளைக் கொண்ட கறி வகைகள், நெய், தயிர், பால், இனிய பலகாரங்கள் முதலியவை திருவடியார்களுக்கு அமுதுண்டு மனமகிழ்ச்சி கொள்வார் என பதிவு செய்துள்ளார் சேக்கிழார். மேலும், அடியார் பெருமக்களை அமரச் செய்து உணவுகளைப் படைத்தப் பின்

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலும் பூமிசை
என்னம் பாலிக்கும் மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே (நாவு.தே- பா- 282)

என்னும் பாடலை பாடுதல் என்பது மரபாக இருப்பதனை நாவுக்கரசர் தன் தேவாரத்தில் குறிப்பிடுகிறார்.

**முடிவுரை**

நாயன்மார்களின் நோக்கம் விருந்தோம்பலாக இருந்தாலும் அதிலிருந்து நாம் உணர்ந்து கொள்ளக்கூடியது இல்லை என்பவருக்கு ஒரு வேளையாவது உணவுகொடுக்க வேண்டும் என்பதேயாகும்.

தான், தன்வீடு, தன்குடும்பம் என்ற குறுகிய மனப்பான்மையுடன் வளர்ந்து வரும் இந்த காலக்கட்டத்தில் விருந்தோம்பல் என்பதே இல்லாமல் அழிந்த விட்டது என்றே கூறலாம். விருந்தினர்களைக் கண்டபோது முகமலர்ந்த காலம் மாறி, முகம் வாடுகின்ற நிலை வேகமாய் உருவாகி வருகிறது. இந்த நிலைமை மாற பழமை வாய்ந்த இலக்கியங்கள் காட்டுகின்ற விருந்தோம்பலின் சிறப்பினை எடுத்துரைக்க வேண்டும்.

விருந்தோம்பலைத் தம் வாழ்வின் நோக்கமாகக் கொண்ட நாயன்மார்கள் பலரினைப் பற்றி பெரியபுராணத்தில் குறிப்பிடுகிறார் சேக்கிழார். தங்களிடம் இருந்த எல்லாச் செல்வங்களையும் விருந்தோம்பலுக்காகப் பயன்படுத்துகின்றனர். செல்வம் குறைந்து வறுமையுற்ற காலத்திலும், இல்லையே என்று கூறாது உயிரையும் பொருட்படுத்தாமல், விருந்தோம்பல் கொள்கையில் உறுதியாக இருந்தனர்.

**துணைநின்ற நூல்கள்**


1. பி.ரா.நடராசன்-பெரிய புராணம், உமா பதிப்பகம், சென்னை – 600 001.
2. பி.ரா.நடராசன்-திருவாசகம், உமா பதிப்பகம், சென்னை – 600 001.
3. பி.ரா.நடராசன்-திருநாவுக்கரசர் தேவாரம், உமா பதிப்பகம், சென்னை – 600 001.
4. க.ப.அறவாணன்-திருக்குறள் உரை, தமிழ்க்கோட்டம், சென்னை- 600 029.